உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞு வைகாசிமீ ங-உ வெள்ளிக்கிழமை (17-5-1974) [இல: சு

# அகில இலங்கை சைவ மாநாடு

## நவமான முறையில் நடைபெறும்

## முப்பதுக்கும் மேற்பட்ட அறிஞர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் 86 வது அகில இலங்கைச் சைவ மாநாடு திட்டமிட்டவாறு 31-5-74, 1, 2-6-74 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம், நீராவியடியில் உள்ள சபை, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்று சபைச் செயலாளர் வை இரகுநாத முதலியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இம் மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழக தத்துவத் துறைத் துணைப் பேராசிரியர் சி. இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் 'மாணிக்கவாசகப் பேறு' "வினையும் வீடு பேறும்" என்னும் பொருள்களில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவதுடன் 31—5—74 அன்று அன்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கி மாநாட்டையும் ஆரம்பித்து வைப்பார்கள் என்றும் செயலாளர் தெரிவித்துள்ளார்கள்.

முப்பதுக்கு மேற்பட்ட உள்ளூர் உரைஞர்களுக்கு இம் மாநாட்டில் கலந்து கொள்ளும் வண்ணம் அழைப்பு விடப்பட்டுள்ளது. பலர் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துள்ளார்கள் என்றும்; ஏனையவர்களது சம்மதக் கடிதம் கிடைக்கப்பெற்றதும் முழுமையான நிகழ்ச்சிநிரல் வெளியிடப்படும் என்று தெரிகின்றது.

---

**சைவ சமய பாடப் புத்தகங்களைப்பற்றி முடிவுசெய்யப்பட்டதா. உண்மை என்ன?**

---

## சைவ மாண்பு

— [ சித். சிவரத்தினம் ] —

(முன் வளர்ச்சி - 4)

இலங்கை அரசியற் சட்டத்திற் காட்டியபடி பௌத்த மதத்துக்கே முதன்மைத் தானமும் அதனைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டுமென்பதிலிருந்து நாம் சிந்திக்கவேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன.

தனிச் சிங்களம் பௌத்த மதத்திற்கு முதன்மை என்றதினால் ஏனைய சமூகத்தவர்களைக் கடலீகரம் செய்யலாம் என்ற நோக்கும் தொனிக்கின்றது இன்றும் அக்காலத்தில் அரசாங்க மதங்களில் சேர்ந்தவர்களுக்கு பதவிகள், சலுகைகள் அளிக்கப்பட்டுச் சமய மாற்றம் நிகழ்ந்ததுபோல நடத்தலாம் என்ற நோக்கும் இருக்கலாம்: இதற்கு அனுசரணையாக நமமவரின் சில ரும் சமரசவாதிகளும் தங்கள் சுயநல வேலைகளில் இறங்கிவிட்டனர். வலிந்து சென்று குழுக்களிற் புகுந்து தாமே சைவ சமயத்தின் அநாதி பகவனுக்கவர முயற்சி

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

---

## வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆண்டுதோறும் நடத்திவரும் அகில இலங்கைச் சைவ மாநாட்டுக்கு தமிழகத்தில் இருந்து சைவ சித்தாந்தத்தில் துறைபோகக் கற்ற பெரியவர்களை அழைப்பது வழக்கம். கடந்த ஆண்டு பேராசிரியர் சோ. சிங்காரவேலன் அழைக்கப்பட்டிருந்தார், இந்த ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக தத்துவத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் சி. இராமலிங்கம் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

இதே வரிசையில் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் கே. சோமசுந்தரம் செட்டியார் 1969-ஆம் ஆண்டு சபையின் அழைப்பை ஏற்று இலங்கை வந்திருந்தார். இன்று அவரின் பேர்த்தி அ. கலைச்செல்விக்கு 26-5-74 அன்று சென்னையில் திருமணம் நடைபெறவிருக்கின்றது. மணமகன் திரு. க. து. சந்திரசேகர் பி. எஸ்சி. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை (செனேற்)யில் கடமையாற்றுகின்றார்.

மணமக்கள் இருவரும் சைவ சித்தாந்தத்தில் ஊறித் திளைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை இனிது வாழ்க என வாழ்த்துகின்றோம்.

---

## தில்லையம்பதியில் உமாபதி சிவாசாரியார் குருபூஜை

### உமாபதி சிவாசாரியார் வாழ்க்கையில் புதிய கருத்துக்கள்

[நமது சிறப்பு நிருபர் ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

"உமாபதி சிவாசாரியார் தில்லைவாழந்தணர்களில் ஒருவர். இவர் காலம் 1290 — 1340 ஆகும். இவரின் தந்தையார் பெயர் சம்புதீக்ஷகர் தாயார் பெயர் கௌரி. பார்வதியை என்ற பெண்ணை மணந்து இரு குமாரர்களையும் ஒரு குமாரத்தியையும் பெற்றெடுத்தார்" இவ்வாறு தில்லையில் நடைபெற்ற விழாவில் பிரமஸ்ரீ த. இராமலிங்க தீக்ஷசர் அவர்கள் M. A. M. Litt கூறியுள்ளார்கள்.

உமாபதி சிவாசாரியாரின் அவதார ஸ்தலமான தில்லையம்பதியில் முதல் முறையாக குருபூஜை திருவிழாவை திருதருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் நடாத்தி வைத்தார்கள்.

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 26 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதினத்திற்கு சிஷிய திருமடமாக விளங்கி வருகின்ற திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளுடன், சித்திரைத் திங்கள் 20 ஆம் நாள் சித்திரை ஹஸ்த நட்சத்திரத்தன்று வருகை புரிந்து, (சித்திரை ஹஸ்த நட்சததிரம், பிரதோஷ காலம் கூடிய நன்னாள்) முதல் முறையாக சந்தானசாரியார்களுள் ஒருவரான ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரின் அவதார ஸ்தலமான தில்லையப்பதியில் குருபூஜை விழாவை சிறப்பாக நடத்தி வைத்தார்கள்,

தில்லையில் உள்ள தருமை ஆதீன திருமடத்தில் இரவு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் முன்னிலையில், ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோவில் செயலாளரான பிரமஸ்ரீ த. இராமலிங்க தீக்ஷிதர் M. A., M Litt. அவர்கள் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது.

மகாவித்துவான் உயர்திரு. ச. தண்டபாணி தேசிகர் வரவேற்புரை கூறுகையில், திருக்கைலாய பரம்பரையை ஸ்ரீ நந்திதேவர் சேர்ந்தவர்கள். ஸ்ரீ நந்திதேவர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நமது உமாபதி சிவாசாரியர் ஆவார். ஆகவே, நந்திதேவருடைய அனுக்கிரகந்தான் மிகவும் தேவையாகும் என்றும், இவ்விழாவிற்கு ஸ்ரீ நடராஜப் பெருமானே தலைமை வகிப்பதுபோல் கோவில் செயலாளர் பிரமஸ்ரீ த. இராமலிங்க தீக்ஷிதர் அவர்கள் "சபாபதி"யாக வீற்றிருப்பது பெருமையாகும் என்றும் பாராட்டுதல் கூறினார்கள்.

பிரமஸ்ரீ த. இராமலிங்க தீக்ஷிதர் அவர்கள் விழாவிற்குத் தலைமைதாங்கி, தலைமையுரை கூறுகையில்,

இந் நாள் நமக்கு ஓர் பொன்னான நாளாகும், உமாபதி சிவம் தில்லைவாழந்தணர்களில் ஒருவராகும், 1290 –1340 ஆண்டுகளுக்கு இடையில் வாழ்ந்தவர்கள், தமிழ் – வட மொழிகளில் உமாபதி சிவம் பல நூல்கள் எழுதியவர்களாவார்கள், சைவசமய சந்தான குரவர் நால்வருள் நான்காவது குரவராவார்கள் உமாபதிசிவம் என்றும் கூறினார்கள்.

விழாவின் தலைவர் பிரமஸ்ரீ த. இராமலிங்க தீக்ஷிதர் அவர்கள் மேலும் தலைமையுரை கூறுகையில், பரமேஸ்வரின் அவதாரம் உமாபதிசிவம் ஆவார்கள், தந்தையாரின் பெயர் சம்பு தீக்ஷிதர், தாயாரின் பெயர்

வளர்ச்சி 4-ம் பக்கம்

---

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகதம்பிரானுக்கு அசையாமணி

புளியம் பொக்கணை நாக தம்பிரான் சிவன்கோவிலுக்கு மணிக்கூட்டுக் கோபுரமும் அசையாமணியும் நன்கொடையாக வழங்கப்பெற்றுள் ளன. அசையா மணியை உபகரித்த திரு. எஸ். கிருஷ்ண சுவாமி அவர்களுக்கு "சிவபூஷணம்" என்றபட்டம் சூட்டப்பெற்று திரு. வி. ஆனந்தசங்கரி அவர்களால் பொன்னுடை போர்த்தப்பட் டது, கும்பாபிடேசு விழா விற் கலந்துகொண்ட சிவாச் சாரியர்களுக்கும் திருக்கோபுரம் அமைத்த சிற்பக் கலைஞர்களுக்கும் ஆசாரிமார்களுக்கும் பிற தொண்டுகள் புரிந்தவர்களுக்கும் சன்மானங்கள் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி அவர்களால் வழங்கப்பட் டன. கோயில் அருச்சகர் திரு. ஊா. ஐங்கரப்பிள்ளை தனது பாராட்டையும் நன்றியையும் கூறினர். பிரமஸ்ரீ எஸ். சபாரத்தினக்குருக்கள் கோபுரத்தில் குடமுழுக்காட்டியபோதும் விழாவின்போதும் ஏராளம் அடியார்கள் பங்குபற்றினர். பகல் மாகேசுவரபூசையும் நடைபெற்றது.

(நமது நிருபர்)

## கந்த புராண வழிபாடு

பிரசித்திபெற்ற சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி சந்நிதியிற் புதுவருடந்தொடக்கம் கந்த புராண பூசை, வழிபாடு தினமும் நடைபெறுகின்றது, சிவஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்கள். கந்தபுராண வழிபாட்டினுல் அளப்பெரும் சிறப்புக்கள் ஏற்படும் என்பதனுல் இவ் வேற்பாட்டினைச் சிவனடியார்கள் மிகவும் வரவேற்கின்றனர் என சுழிபுரம் சைவ சித்தாந்த சங்கச் செயலாளர் திரு. த மயில்வாகனம் அவர்கள் நமது நிருபரிடம் கூறினர்.

## நன்கொடை

இந்து சமயப் பணிகளைச் செய்யும் தாபனங்களுக்கு 1974-இல் கலாசார இலாகாவினுல் வழங்கப்பெறும் நன்கொடையை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கையையெடுப்பதென 11-5-74 இல் கூடிய இந்து சமய ஆலோசனைச் சபை முடிவு செய்துள்ளது. இதன்படி இந்து சமயப் பணிகளைச் செய்து வரும் தாபனங்களுக்கும் வாரந்தோறும் இந்துசமய பாட வகுப்புகள் நடாத்தும் தாபனங்களுக்கும் இவ்வருடம் நன்கொடைகள் வழங்குவதெனவும் இவ்வித தாபனங்கள் தேவையான விண்ணப்பப் படிவங்களையும் பிரமாணங்களையும், 135 தர்ம பால மாவத்தை, கொழும்பு 7 என்ற மூக வரியி லுள்ள கலாசார அத்தியட்சகரிடமிருந்து பெற்று 31-5-74 க்கு முன் அவருக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் ஷெ சபை தீர்மானித்தது.

# நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம் : — "பழைய பாணி" —

(முன் வளர்ச்சி — 31)

ஆறுவது :- வாரானைப் பருவம்.

பரசமய கோள்பரி கரித்திடற் கோர்முகம்
பழனமதிகழ் வேதாகமப்
பண்புநடை பிறழாது பார்த்திடற் கோர்முகம்
படிப்பறிவி லாமையொடுகல்
குரவுநலி சமூகநிலை குறிகொளற் கோர்முகம்
குத்திர வுலோப வஞ்சக்
கொள்கைநிறை சிவிலுத்தி மோகத்தர்
—கொடுமையுட்
கொண்டுகறு விடவோர்முமம்
பரசுபழ வேடுபேரி சோதனைக் கோர்முகம்
பகர்கண் டனக்கோர்முகம்
பாங்கமையு மாறுமுக மென்பர்நின் பணியிஙிலும்
பதினு யிரமுகத்தே
விரவுதல்வி யந்துன்னை வேண்டுதும் மேதகைய
வித்தகர்பி ரான்வருகவே
மெய்ச்சேவை மணிமுடியி லச்சினையெனுவொளிர்
வீரவிறல் வேள்வருகவே

குறிப்பு கண்டனக்கோர்முகம்:— சாரியை யுள்வழிச் சாரியை கெட்டுவந்த புணர்ச்சி,

(அடுத்த இதழில் வளரும்)

## இந்து இளைஞர் மன்றம்

யாழ். இந்து இளைஞர் மன்றத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் 12-5-74 அன்று காலை 10 மணி அளவில் நடைபெற்றது

அக் கூட்டத்தில் நடப்பு வருட பொதுக் கூட்டத்தை 30-6-74 ஞாயிறுக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் சென்ற வருட நிதி சேகரிப்பில் இலங்கையில் இயங்கும் இந்து இளைஞர் மன்றங்களில் முன்னணி வகிக்கக் கூடிய நிலையை யாழ், இந்து இளைஞர் மன்றம் கொடித் தின நிதியாக ரூபா 2662–94சதத்தை சேர்த்தது குறிப்பிடத்தக்கது. இதனில் பேரவைக்கு செலுததிய பங்குப் பணம் போக மிகுதியாக உள்ள ரூபா 713/- அடுத்த ஆண்டு கைத்தொழில் திட்டங்களுக்கு செலவிடுவதெனவும் தீர் மானிக்கப்பெற்றது.

## சிவத்தமிழ்ச்செல்வி சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வண்ணை நகர் அரசடி விநாயகராலய கும்பாபிஷேக தின 5ம் திரு விழாவாகிய இன்று (17-5-74 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தபின், சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் "திருமுறையின் பயன்கள்" என்னும் பொருள் பற்றி சொற்பெருக்காற்றுவார்கள். அதன் பின், விநாயகப் பெருமான் திரு வீதி யுலா வரும் நிகழ்ச்சியும் இடம் பெறும்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ, இல: M B 13095

(1) விஞசித்தம்பி அம்பலவாணரும் மனைவி (2) பகவதியார் பொன்னுவெளி, பூநகரி
எதிராக —வழக்காளி
(1) மயில்வாகனம் கைம்பெண் அன்னம்
(2) செல்லப்பா மார்க்கண்டுவும் பெண் (3) புவனேஸ்வரியும்
24, செட்டித்தெரு, நல்லூர்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 13095 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படு ஒரு துண்டுக்காணி 1974 ம் ஆடி ௴ 8-ம் திகதி (8-7-74) திங்கட்கிழமை முற் பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 4290/-ம் 4-5-72 தொடக்கம் 22-8-72 வரையுமான வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 380-16 இதில ரூபாய் 1500/- எதிரிகள் ஒரு பகுதிக்காகக் கொடுத்திருப்பதாலும் செலவில் 150/- கொடுத்துள்ளதாலும் குறைக்கப்பட வேண்டும்.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'அள்வான் வளவும் தெரிவில் வளவும்' நி. பர. 1 குளி 3½ம், இதற்குள் அடங்கிய வீடும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணறு, ஆடுகால் துலா, தூர்வை வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் பாவிப்பும், எல்லை கிழக்கு:- முதலாம் எதிரியின் ஆதனம், மேற்கு:- றோட்டு வடக்கு:- அருளானந்தன் கனகம்மாவின் ஆதனம், தெற்கு:- கிழக்குக் காணிக்குரிய 4 முள ஒழுங்கை, கிழக்குக் காணிக்குரிய கிணற்றில் பங்கும், ஆடுகால் வழிவாய்க்கால் பாவிப்பும், வடக்கெல்லைக் கருகால் கிணற்றுக்கு போக்குவரவு செய்யும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும புறநீங்கலாக இதடங்கலும்.

இ. கனகரத்தினம்

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
நம் 35/2, கொழும்புத்துறை வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
[illegible] 17-5-74

அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் [1973] நிகழ்ந்த

# :-: கவியரங்கம் :-:

## அப்பரின் அன்புள்ளம்

திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] B. A. அவர்கள்

மூன் வளர்ச்சி — 4

தாண்டக வேந்தரின் தயாவையும் அன்பையும்
மூண்டிடு பத்தியின் முனைப்பையும் நினைத்திடக்
குன்றைக் கிழார்உரை நின்றுமே நோக்குக.
ஒன்றோ? இரண்டோ? பற்பல உளவாம்.

உதாரண மாக உரைத்திட வேண்டுமேல்
சிதாகா சத்துச் செம்மலைக் கயிலையிற்
காண்டலே குறியாய் நீண்டதோர் சுரத்தில்
ஆண்டகை சென்றதை அறிந்திடல் வேண்டும்
கயிலையைக் காணும் கருத்தினில தம்முடை
உயிரையே பணயமாய் வைத்தவர் அப்பர்
செம்மைசேர் நிமலர் தம்மையே கைலையிற்
கொம்பனை உமையுடன் பூதமாம் கணத்துடன்
நந்தியும் தேவரும் நயந்திடுஞ் சூழலில்
இந்தக் கண்களால் காண்டிடல் ஒன்றையே
நெஞ்சத் திருத்தி நெடுவழி நடந்தனர்
பகலும் இரவும் பார்த்திடா ராகிப்
பசியும் களையும் பிணியும் மறந்து
நடந்தார் நடந்தார் நடந்துமே நயந்தார்
நடந்தார் நடந்தார் நயந்துமே நடந்தார்
செமலர் நோன்றுள் சிந்தியார் மனம்போல்
வெம்மையிற் கிடந்த வெஞ்சுரம் அதனில்
நடந்தார் நடந்தார் நடந்துமே நயந்தார்
நடந்தார் நடந்தார் நயந்துமே நடந்தார்
தாமரை போலும் தாளினை தேய்ந்தன
பரட்டள வாகப் பசைத்தசை தேய்ந்தது
எனினும் கைலையை எய்தலை மறவார்
பனிமலர்ச் சடையனைப் பாவையாள் தன்னெடும்
தரிசித் திடலைக் கணத்திலும் மறவார்
நடந்தார் நடந்தார் நடந்துமே நயந்தார்
நடந்தார் நடந்தார் நயந்துமே நடந்தார்
கால்களை இழந்தவர் கைகளை ஊன்றித்
தாவியே ஏகினர் தவித்தலே இல்லார்
கைகளும் மணிபந் தசைந்தற லாகிச்
சிதைந்தன முரிந்தன சிந்தின தசையும்
ஆயினும் கைலையில் அமைந்தபே ரன்பவர்
தேயினும் தேயினும் தீயென மூண்டதே
அடக்குதல் கூடா ஆசையி னலே
மடக்கிய கையராய் மார்பினுல் தவழ்ந்தார்
மார்பும் தசையது நைந்திடச் சிந்தி
மார்பின் எலும்பும் முரிந்திட அந்தோ
புரண்டார் உருண்டார் புரளவும் ஆற்ருது
கிடந்தார் கிடந்தார் கேடிலாச் சிந்தையில்
விடந்தோய் கண்டத்து விமலரை எண்ணினர்.
விமலரும் வேதிய வடிவின ராகிக்
கமலமார் தடமொன் றமைத்துமே அண்ணல்
முன்னரில் தோன்றி முறுவல்செய் தன்பாய்ச்

"சிந்தி இவ்வுறுப் பழிந்திட வருந்திய திறத்தால்
இந்த வெங்கடத் தெய்தியது என்" என இசைத்தார்.

வாக்கின் மன்னரும் வந்தவர் நோக்கி

"வண்டு லாங்குழல் மலைமக ளுடன்வட கயிலை
அண்டர் நாயகர் இருக்கும்அப் பரிசவர் அடியேன்
கண்டு கும்பிட விருப்பொடுங் கயதலின் அடைந்தேன்
கொண்ட என்குறிப் பிதுமுனியே" எனக் கூறக்

கேட்டனர் விமலர் சோதனை தொடர்ந்தது.
கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு
பயிலும் மானிடப் பான்மையோர் அடைவதற் கெளிதோ?
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற் கரிதால்
வெயில்கொள் வெஞ்சுரத் தென்செய்தீர் வந்தென விளம்பி
மீளும் அத்தனை உமக்கினிக் கடன்" எனத்
தோளிலும் உடலிலும் துவளுமுந் நூல்முனி
யாழிலும் இனிய தீங்குரல் எடுத்துத்
திருவாய் மலர்ந்தனர் தெய்வப் பித்தரோ

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 12699
யாழ்ப்பாண மாவட்ட
கோடு

சீனிவாசகம் பொன்னம்பலம்,
வீமன்காமம். — வழக்காளி

எதிராக

1. முருகேசு நல்லதம்பி
2. பெண் யோகமணி
நீர்வேலி, யாழ்ப்பாணம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M.B 12699-ம் இலக்க வழக்கின் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதன்ம் 1974-ம ௵ ஆனிமாதம் 21-ம் திகதி (21-6-74) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அவ் வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் 2,470/- மேலும் 2000/- ரூபாவிற்கு 12-8-71 — 24-4-72 வரைக்கும் 12 வீத வட்டியுங் கூட்டிய தொகைக்கு 24-4-72 தொடக்கம் முழுப் பணம் இறுக்கும்வரைக்கும் 5வீத வட்டியுங் கோட்டுச் செலவு 355-45 சதமும் ஏற்பட்ட செலவு 222-45 வெலியாத்துச் செலவு 72/- இனிமேலேற்படும் செலவு 61/-) இதில் 800/- ரூபா கழித்து மிகுதி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பழை குறிச்சி மாவிட்டபுரயிறை "புனிதலம் பற்றை" பர. நில, லா. 6¼ எல்லை கிழக்கு:- வல்லிபுரம் பெண் சிவககொழுந்துவிற்தும் மறுபேருக்குமுரியவாதனம் வடக்கு:- தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசுவிற்கும் மறுபேருக்குமுரியவாதனம், மேற்கு:- லங்கையர் மகாலிங்கத்திற்தும் மறுபேருக்குமுரியவாதனம, தெற்கு:- தண்ணீர் வாய்ககால்; இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி பதிவு இல: H 403 / 120

**தா, க. பொன்னுத்துரை J.P.**
கொமிஷ்னர் & விலைமதிப்பாளர்
"அகிலகம்"
28/1. யாழ் ரோட்,
யாழ்ப்பாணம். 30-4-74
31, 17-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 12417

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மயில்வாகனம் சுப்பிரமணியம்
—வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், அன்னசத்திரம் ஒழுங்கை, கந்தர்மடம்.
(1) சுந்தரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(2) பெண் மணிமேகலாதேவி
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 12417ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம் ஆடிமாதம் 1ம் (1—7—74) திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5,465/-ம், 5-4-71 தொடக்கம் 24-2-72 வரைக்கும் ரூபாய் 5,000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 506 - 65 இதில் ரூபாய் 1,500/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை "தம்பாட்டி" பர, நில, இலா, 9 இதில் தென் கிழக்கில் பர. நில. இலா. 1 பிற நீங்கலாக மிகுதியாகவுள்ள பர. நில. இலா. 8 வான்பயிர் செய்பயிர்களும், கிணறும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். இதற்கு எல்லை கிழக்கு:- மிகுதியாகவுள்ள ஆதனமும், கையொழுங்கையும், மயில்வாகனம் பெண் அன்னலெட்சுமிக்குரிய ஆதனம், வடக்கு:- சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனங்கள்; மேற்கு:- பொன்னம்பலம் பெண் நாகரெத்தினத்திற்குரிய ஆதனமும், கையொழுங்கையும், தெற்கு:- ஒழுங்கையும், மிகுதியாகவுள்ள பகுதியிலுள்ள கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புருத்தும். பிற நீங்கலாக பதிவு இல: D. 344/160

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிஷனர்&விலைமதிப்பாளர்,
6, கன்னாதிட்டி ரோட்
யாழ்ப்பாணம் 3-5-74
15 17-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல. M B 9790

யாழ்ப்பாணம்; சுண்டிக்குளியைச் சேர்ந்த
1. வேலுப்பிள்ளை ஞானப்பிரகாசமும் மனைவி
2. மரியாப்பிள்ளையும்
—வாதிகள்

எதிராக

91, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கைம்பெண் காமாட்சிப்பிள்ளை (காலஞ்சென்றவர்)
—பிரதிவாதி

காலஞ்சென்ற எதிராளியின் சட்டபூர்வமான பிரதிநிதியாக சுப்பிரமணியம் முத்துக்குமாருவின் மகன் நியமிக்கப்பட்டுள்ளார்
—பிரதிநிதி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 9790 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ஆண்டு ஆனி மீ 19-ம் திகதி (19—6—74) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியும் ரூபாய் 6750/-ம் 5-3-1968 தொடக்கம் 14-12-1968 வரைக்கும் 5000/- ரூபாவிற்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 421-36 சதமுமாகும், இதில் தீர்வைத்தொகை 2500/- ரூபாவும் கோட்டுச் செலவும் கழித்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பிரிவைச்சேர்ந்த சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் "திருக்கேசரமுடையான் வளவு" என்று சொல்லப்படும் நிலப்பரப்பு 12, 33/100 குழியும் அதனைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கில்:- எஸ். அரியப்புவினதும பங்காளர்களினதும் ஆதனமும், எல்லை வடக்கில்:- படத்தில் உடமையாகக் காட்டப்பட்ட 6ஆவது காணியும், எல்லை மேற்கில்:- புகையிரத நிலைய வீதியும், எல்லை தெற்கில்:- ஆஸ்பத்திரி வீதியும் உள்ளன. பதிவு இல. D 291/76 இந்த ஆதனம் உத்தரவுபெற்ற உலாந்தா கே. கே. அம்புரோசுவினுல் 16-6-1961ல் தயாரிக்கப்பட்ட 159வது படத்தின்படி 7வது துண்டுக்காணியாகக் காட்டப்பட்டுள்ளது.

"வடிவேல் உதயம்" — **சி. ஆ. த. வடிவேலு J. P.**
காங்கேசன்துறை வீதி, — கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில் — ஏலவிற்பனையாளரும்
30-4-74. — 43 17-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல. M. B. 9027

கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1. கந்தையா இராசரத்தினமும் அவரின் மனைவி 2. கனகேஸ்வரியும் —வாதிகள்

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்துக்குமாரு இராமலிங்கம்
—பிரதிவாதி.

கச்சேரியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1. பொன்னையா நேசத்துரையும் அவரின் மனைவி 2. பூபதியும், திருநெல்வேலியைச் சேர்ந்த 3. எஸ், கந்தையாவும் அவரின் மனைவி 4. கனகம்மாவும்
— மேலதிக வாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் M B 9027ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1974ம் ஆண்டு ஆனி மாதம் 25-ம் திகதி (25-6-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியும் ரூபா 21,025/-ம் 22-4-1967 தொடக்கம் 17-5-1969 வரைக்கும ரூபா 13,000/-க்கும் 12 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும்வரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 581-91 சதமுமாகும். இதில் ரூபா 10581-91 சதம் கழித்து,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார்பண்ணைப் பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கில் உள்ள பல்லுவிளித் தோட்டம்" என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு 5½. ஆனுல் 1940ம் ஆண்டு ஆடி மீ 6ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா எஸ். ஜே பிள்ளை அவர்களால் அளந்து கீறப்பட்ட 90 ஆம் இலக்க படத்தின்படி அக்காணி 5 பரப்பும 6, 1/16 குழியும் அதனைச் சேர்ந்த வீடுகளும் கிணறுகளும் வான்பயிர் செய்பயிர்களும் உள்ளன.

எல்லை கிழக்கில்:- சபாபதியின் மனைவி கனகேஸ்வரியின் ஆதனமும், எல்லை வடக்கில்:- சி. கே. தம்பியின் வாரிசாளர்களின் ஆதனமும், எல்லை மேற்கில்:- கந்தையாவின் மனைவி சிவயோகத்தின் ஆதனமும்; எல்லை தெற்கில்:- வீதியும் உள்ளன. இவை D 279/120ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

'வடிவேல் உதயம்' — **சி. ஆ. த. வடிவேலு, J. P.**
காங்கேசன்துறைவீதி, — கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
கோண்டாவில், — ஏல விற்பனையாளரும்
9-5-74 — 42 17-5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

(1) முருகேசு மாரிமுத்து (2) பெண் இராமாசிப்பிள்ளை
இருவரும், மூளாய். —வழக்காளிகள்

வழ. இல. M B 12819. எதிராக

(1) கதிரவேலு பழனி (2) பெண் செல்லாச்சி
இருவரும், மூளாய். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12819ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ௵ ஆனி மீ 29ம் திகதி (29—6—74) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 2490/- மேலும் 16-11-71 தொடக்கம் 1-8-72 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 287-10 சதம் இதில் ரூபாய் 125-00 கழிக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்கு சங்கானை கோவிற்பற்று மூளாய் இறை "நெடுஞ்சாந்தையும் புளியடியிற் சாந்தையும்" பர. நில. இலா. 3 குளிகள் 14½ வீடுகளும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு கனகரத்தினம் பெண் இராசேஸ்வரிக்குரிய ஆதனம், வடக்கு கந்தையா பெண் இலட்சுமிக்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு கையொழுங்கை, இந்த எல்லைப்படி இதில் மேற்கெல்லை ஒழுங்கையிலிருந்து கிழக்கெல்லைக் காணிக்குப்போகும் ஆறுமுள அகலங்கொண்ட வழிப்பாதை புறநீங்கலாக மததியடங்கலும் கிழக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கில் நாலில் ஒரு பங்கும் கிணற்றுக்குப் போக்குவரவுபண்ண வடக்கு வேலி அருகாக ஆறுமுழ அகலங்கொண்ட வழியும் இறைவாய்க்கால் தூர்வையும்.

167/1, கோவில் வீதி, — **ப, நா. தருமலிங்கம்**
நல்லூர் வடக்கு, — கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம் 9-5-74 — 39 17-5-74

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. கஸ்தூரியார் ரோட்டு யாழ்ப்பாணம். சபாபதி மார்க்கண்டு
2. ஷை யூர் பெண் தனபாக்கியரெத்தினம் —வழக்காளிகள்

வழ, இல. M. B. 11773 எதிராக

சங்கானை மேற்கு, யாழ்ப்பாணம்,
நல்லதம்பி கைம்பெண் பொற்கொடி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11773-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974ம் ௵ ஆனி மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்க்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6840/- ரூபாய் 4000/-க்கு 1970ம் ௵ ஆனி மீ 15ம் திகதி தொடக்கம் 1971ம் ௵ கார்த்திகை மீ 4ம் திகதி வரை 9 வீதமான வட்டியும் அதனமேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 425.71 சதம்

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கிறை "ஊர்க்குளியவத்தை" பர. நி. இலா. ஆறு (பர. நி, இலா. 6) கிணறும, செய்பயிர் வான்பயிர்களும் புதிதாகக் கட்டப்படும் கல் வீடும் எல்லை கிழக்கு:- செல்வரெத்தினம் பெண் பரமேஸ்வரிக்குரியவாதனம், வடக்கும், மேற்கும்:- ஒழுங்கை, தெற்கு:- கந்தையா நாகேந்திரம் பெண் இலட்சுமிக்குமுரியவாதனம், இதடங்கலும், இக்காணியின் தெற்கெல்லைக்காணியின் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பாகமும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இதன் பதிவு E. 271/4

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொமிஷனர், ஏல விற்பனையாளர்,
காரைநகர். 1974 ௵ வைகாசிமீ 10 உ — விலைமதிப்பாளர்.
40, 17—5

## கோட்டு விற்பனவு விளம்பரம்

139, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(1) திரு, அரியநாயகம் (2) பெண் ஹர்யட் சரஸ்வதி
இல M B 12428 எதிராக —வழக்காளிகள்
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(1) கந்தப்பு சதாசிவம் (2) பெண் அலீஸ்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B.ம் 12428 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆ. ஆனி மாதம் 21ம் திகதி (21-6-74) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று, பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை; முதல் வட்டி ரூபா 1650/-ம் 19-4-71 தொடக்கம் 1-10-71 வரைக்கும் ரூபா 1250/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 332-90 வட்டிக் கணக்கால் ரூபா 100/-ம்; ரூபா 500/-ம், ரூபா 175/-ம் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளியிறை "மாவிலங்கடி வயல்" நெற்பரப்பு இலா ¾ இதற்கெல்லை கிழக்கு ரேட்டு வடக்கு ஜோஸப் பெண் பரிமளத்திஞதனம், மேற்கு ஜொஸப் பெண் அன்னம்மாவுக்கும் வயித்தி ஜேம்ஸ்க்குமுரியவாதனங்கள், தெற்கு இக்காணியின் மிகுதியாதனம். இது அடங்கலும்.

**அ. போ. எதிர்மனசிங்கி**
14 டேவிட்ரோட், — கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம். 10-4-74 — 38 17-5

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவராயினர் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஞு வைகாசி மீ ரு-உ வெள்ளிக்கிழமை [1974]

## விபரீதம் விளைவிக்கும் வேலை நிறுத்தங்கள்

குற்றங் குறைகளைத் தவிர்த்துக் குணப்படுத்தி நெறிமுறை கொணர்வதற்குரிய வழி ஒன்றுண்டு அது பழைய பண்பாட்டின் பெருமையுடையது' நீதியின் பாலுள்ளது, நெஞ்சத்தில் நிம்மதியுண்டாக்குவது, ஆராய்ந்து ஆவனசெய்வதே அம்முறை. அவ்வாறு நெறிமுறை காண்பவர்களும் ஒழுக்க சீலர்களாயிருத்தல் வேண்டும் என்பது சொல்லாமலே அமையும்.

ஆனல் மக்கள் வாழ்வு பலதிறப்படப் பரந்து அரசியல் விபரீதங்களும் மலிந்து வந்தபின் குறை தீர்க்கும் முறையும் மாறிவிட்டது. சாமபேத தான தண்டம் என்ற வகையிலே நான்காவதாயுள்ள தண்டம் என்ற வழியையே அடிப்படையாகக் கொண்டு வேலைநிறுத்தம் எனப்படும் ஒரு கொள்கை வேரூன்றிவிட்டது. தண்டிக்கப்படுபவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மட்டுமல்ல பொதுமக்கள் யாவருமே இந்தப் புதுமுறையாற்றுக்கப்படுகின்றனர். குறைதீர்க்க வேண்டியவர்கள கூடப் பலவேறு இன்னல்களுக்காளாகின்றனர். உதாரணமாக ஒரு பெரிய நாட்டிலே போக்குவரத்துச் சேவையை நிறுத்தி வைப்பதற்கு ஊழியர்கள் முற்பட்டால் அத்தேசத்தின் பொதுநலம் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை யாருமே எடுத்துக்கூற வேண்டியதில்லை. இச்செய்கையினுல் அசம்பாவிதங்களும், விபத்துக்களும், கலகமும், அமைதியின்மையும் தலை தூக்கும். அல்லாமலும தேசத்தின் செம்மையும் குறைக்கப்படும் அல்லவா?

பொதுமக்களனைவரையும் அல்லலுறச் செய்யும் வழி செம்மையின் பாற்பட்டதாகாது. ஆகவே வேலைநிறுத்தம் என்னும் விபரீத வழியை விடுத்து ஆலோசனைகளாலும், கலந்துரையாடலாலும், இல்லையேல் நீதிமன்றத்தின் தீர்ப்பினுலும் குறை குற்றங்களுக்கு மருந்து காண்பது உசிதமாகும், ஒழுக்கநெறியாகும, உலகநெறிகளுக்குரியதுமாகும்.

## சைவ நூல்கள் கூறுந் தவம்

தவம் என்பது ஒருவன் தனது மனம் மொழி மெய்களை பிரவிருத்தி மார்க்கமாக ஐம்பொறிகளின் நுகர்ச்சிகளிற் செல்லவிடாது நிவிர்த்தி மார்க்கமாக அவற்றை இறைவன் திருவடிகளில் பதிய வைத்தலாம். இத்தவம் ஒருவனுக்கு இன்றியமையாது வேண்டப்படும். அவன் வேண்டியவற்றை வேண்டியவண்ணம் எய்தலாம். மக்கள் தருமநெறியில் நின்று இன்பமாக வாழுதற்கும் தவமின்றியமையாதது. சைவ நூல்களில் அத்தவத்தை மூன்று பிரிவுகளாக வகுத்திருக்கின்றார்கள். அவையாவன: வாசிகம், மானதம் காயிகம் என்பன. மானசம் மனத்தினுற் செய்யப்படுவது. வாசிகம் வாக்கினுற் செய்யப்படுவது. காயத்தினுற் செய்யப்படுவது காயிகம். "மானுடப் பிறவி தானும் வகுத்தது மனம் வாக்காய மானிடத்தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றே" என்றனர் அருணந்தி சிவாச்சாரியர்.

மானதமே வாசிகமே காயிகமே யெனவகுத்த
வீனமில்சீர்த் தவமூன்று மிவற்றின் மானதந்தரும
தானமிசை மதிவைத்த றயவுபொறை சிவனை
மோனமுறத் தியானித்த லைந்தடக்கன் முதலனந்தம்.

மானசமாவது தருமத்தின் மீதும் தானத்தின்மீதும் அறிவைச் செலுத்துதல். கருணை வைத்தலும் பிறர் செய்த தீமையைப் பொறுத்தலும் தீழை புயன்...

## கவியரங்கம் அப்பரின் அன்புள்ளம்

(2-ம் பக்கத்து வளர்ச்சி)

பொன்னிற் பொலியும் பொன்மலை யாளர்
உன்னித் துரைத்தமை உளங்கொளா ராகி,
"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ ளேன்" என மறுத்தார்,
சொற்றிறம் பாமையாம் கற்பினை யுடைய
அப்பரின் மொழியினுல் மிக்குறக் கருணை
வள்ளலும் தன்னுடை வடிவினில் தோன்றி
எள்ளிய உடலைமுன் இருந்தபோல் ஆக்கி
உள்ளிய அரசரின் உள்ளத் தாசையைத்
தெள்ளிதின் திருவை யாற்றில் முடிப்பதாய்த்
திருவாய் மலர்ந்து திடீரென மறைந்தார்.
கருவாய்க் கிடக்கும் கருத்தினை உவர்த்த
அப்பரின் அன்பிற் கடிமையா னவரே.
அடிமையும் ஆனுர் அடியார்க் கடியவர்
அடிமையும் ஆக்கினுர் அப்பரைத் தமக்கே!

## சைவ மாண்பு

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

கள் செய்வதை சகித்துக் கொள்ள முடியுமா?

நாவலர் பெருமான் தமது விக்கியாபனத்தில் குறித்திருப்பதை நாம் உற்றுநோக்குவோமாக.

யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகின்றவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது, பயன் பெறுன் அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினுலே பெறப்படும் பிரயோசனமும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாதபொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

சைவ சமயத்தவர்கள் மற்றைய சமயத்தவர்களில் விரோத மனப்பான்மையுடையவர்களல்லர். எந்தச் சமயத்தில் பிறந்தாலோ அந்தச் சமய வழியே நடக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களாவர். ஆனல் பதவி உயர்ச்சி, பொருள் லாபத்துக்காக மதம் மாறுவதைச் சகித்துக் கொள்ளமாட்டார்கள். பிறமதபோதனை என்ற போர்வையில் சமயங்களுக்கு அழிவு உண்டாகுமேயன்றி ஆக்க நிலையேற்படமாட்டாது.

நாவலர் பெருமானுக்குச் சிலை எடுத்தலும், முத்திரை வெளியிடுதலிலும், ஞாபகக் கட்டிடம் கட்டுவதிலும் ஒருவித பயனும் இல்லையாகும். அவர் சமயத்துக்கும் தமிழுக்கும் காட்டிய இலட்சியங்களைக் கடைப் பிடிக்கச் செய்வதே தலையாய கடனாகும். (வளரும்)

சொற்களைச் சொல்லுதல் சிவபெருமானைச் சிந்தித்தல் பஞ்சேந்திரியங்களையும் அடக்குதல்முதலியனவாம்.

வாசிகமாவது ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுதலும் பஞ்சப்பிரம மந்திரங்களையும் உபநிடதங்களையும் ஓதுதலும் வேதங்கள் கூறும் சதருத்திர மந்திரங்களை ஓதுதலும் பத்திருபமான தோத்திரங்களை ஓதுதலும் குற்றமகலப் பெரியதருமங்களை எடுத்துக் கூறுதலுமாம்.

காயிகங்களாவன; சிவபெருமானை யர்ச்சித்தல், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலை பிரதக்ஷிணஞ் செய்தல், சந்நிதியிற்சென்று வணங்குதல், சிவபெருமான் திருப்பணிகளைச் செய்தலும், சிவபெருமானுடைய திருச்சடையிலுள்ள கங்காதேவியின் வடிவமாகவுள்ள தீர்த்தங்களில் ஆடுதலுமாம்.

இவ்வுண்மைகளைப் பரஞ்சோதி முனிவன் தமது திருவிளையாடற் புராணத்தில் ஏழுகடலழைத்த படலத்தில் கூறுகின்றனர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில், 17—5—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர்: திரு. நம. சிவப்பிரகாசம்
ஆசிரியர்: திரு. மு. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமாமன்ற கலாசார நிலையம்

நாட்டின் தலைநகரில் இந்து மாமன்றம் அமைந்து வரும கலாசார நிலையத்தின் நில மட்ட வேலைகள் சுமார் ஒரு இலட்ச ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. மேற்கொண்டு ஐந்து மாடிகளையும் கட்டுவதற்கு புதிய கேள்விப் பத்திரங்கள் கோரப்படவிருக்கின்றன.

## குழந்தைகளையுமா குழப்பக்காரர்கள் பணயம்கோள்வது!

இசுரேலிற் பதினுறு பச்சிளங் குழந்தைகள் பயங்கர வாதிகளின் சூழ்ச்சியிற் சிக்கிப் படுகொலை பண்ணைப்பட்டார்களாம்! காலம் மாறிக் காலனும் கலகக்காரருக்குக் கை கொடுத்து வருகின்ருன் போலும்! முன்னேற்றம் முற்போக்கு! என்னே இப் பேரிடி!

## தில்லையம்பதியில்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

கௌரி, பிறந்த வருஷம் ஸ்ரீமுக வருஷம், மாமன் பெயர் சபேச தீக்ஷிதர், அன்னுருடைய மகள் பார்வதியை திருமணம் செய்து கொண்டவர், ஸ்ரீமூல நாத தீக்ஷிதர், விருஷபவஜ தீக்ஷிதர் என்ற இரண்டு குமாரர்களும், சுசிலா என்ற ஓர் குமாரத்தியும், உமாபதி சிவத்திற்குப் பிறந்தனர் என்றும் கூறினுர்கள்.

விழாத் தலைவர் பிரமஸ்ரீ இராமலிங்க தீக்ஷிதர் அவர்கள் மேலும் தலைமையுரை கூறுகையில் உமாபதிசிவம் மறைஞான சம்பந்தரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், மந்தரமூர்த்தி தீக்ஷிதர் அவர்களிடத்தில் உபதேசம்பெற்றவர்கள் என்றும் கூறினுர்கள்.

பிரமஸ்ரீ இராமலிங்க தீக்ஷிதர் அவர்கள் தலைமையுரையில் மேலும் பேசுகையில் பௌஷ்கர பாஷியம், குஞ்சிதாங்கிரிஸ்தபம், பதஞ்சலி சூத்ரபாஷியம், ருத்ரபாஷியம், நடராஜ தொனிமந்தர ஸ்தபம், நடராஜ சகஸ்ரநாம பாஷியம் முதலான வடமொழி நூல்களையும், கொடிக் கவி, கோயிற்புராணம், சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், திருப்பதிக் கோவை, திருமுறைகண்ட புராணம். திருத்தொண்டர் புராணசாரம் முதலானத் தமிழ்நூல்களையும் எழுதியுள்ளார்கள். சைவ சித்தாந்த சாஸ்திரம் பதினுன்கில் உமாபதி சிவம் 8 நூல்களை எழுதியுள்ளார்கள். அவர்களுடைய 8 நூல்களுக்கும் சித்தாந்த அஷ்டகம் என்று கூறப்படுகின்றது என்றும், உமாபதி சிவம் 76 ஆவது வயதில் ஈஸ்வர வருஷம் சித்திரை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் பிரதோஷ காலத்தில் சிவபதம் அடைந்தவர்கள் என்றும், அவர்களுடைய ஆச்சிரமம் தில்லையம்பதியின் கீழ்பால் கொற்றவன் குடியிலுள்ளவென்றும் கூறினுர்கள்.